[1993 அக்டோபர் 29

66 —

மலையாறைக் கடக்க மேம்பாலம் கட்டுதல்.

* 10672— திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதி மேல் அரசம்பட்டுக்குப் போகும் கிராமப்புற நெடுஞ்சாலையில் மலையாறைக் கடக்க மேம்பாலம் கட்டும் பணி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை விரைவுபடுத்தி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ; ஒப்பந்தக்காரரின் தாமதத்தாலும், நவம்பர் 1991 வெள்ளத்தில் மாற்றுப் பாதை பாதிக்கப்பட்டதாலும் பணி தாமதப்பட்டது. வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட மாற்றுப் பாதை நெடுஞ்சாலைத் துறையால் சரி செய்யப் பட்டு பணி நடைபெற்று வருகிறது. வேலை முழுவதும் வரும் மார்ச் 1993-க்குள்ளாக முடிக்கப்பட திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

69—

போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் ஆலையை கூட்டுறவுத் துறைக்கு மாற்றுதல்.

* 17013— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அக்ரோ (TAI) நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் ஆலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால், அதனை கூட்டுறவுத் துறையாக (Joint seeter) மாற்றம் செய்ய அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

1993 அக்டோபர் 29]

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

78—

மேதரா இனத்தவரை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்த்தல்

* 11221—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதிகளில் வாழும் பிற்படுத்தப்பட்ட மேதரா இனத்தவரை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ''மேதரா'' இனத்தவர் தமிழ் நாட்டில் உள்ள மலைப் பகுதிகளில் வசிக்கவில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

பத்தொன்பதாம் பட்டியல்

கைரேகையிடும் கடைநிலை ஊழியர்களுக்கு கையெழுத்திட பயிற்சி அளித்தல்

1—

வினா எண் 11028—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைரேகை போடும் கடைநிலை ஊழியர்களுக்கு, கையெழுத்து போடக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பை (Pay drawing) அதிகாரிகளிடம் ஒப்படைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) கையெழுத்து போட்டால்தான் சம்பளம் என்று அறிவுறுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

---

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 51-ன்படி, உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு, அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ள விடைகள் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன.